பக்கங்கள்: ஆறு

# உதயன்

விலை ரூபா 4.50

கடர்: 6 பிரமோதூத ஹூ பங்குனி மீ 09 உ சனிக்கிழமை [23-03-1991] UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 116

# நான்காம் நாளாகவும் மன்னாரில் பெரும்போர்

## அரச படையினர் பலர் உயிரிழப்பு இருபத்தைந்து வேங்கைகள் களப்பலி

யாழ்ப்பாணம், மார்ச் 23

மன்னார் மாவட்டம் சிலாவத்துறை, கொக்குப்படையான் இராணுவ முகாம்கள் மீது விடுதலைப் புலிகள் தொடுத்த பெரும் போர் நேற்று நான்காவது நாளாகவும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்ததாக செய்திகள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளின் உக்கிரத் தாக்குதலினால் அரச படையினர் பலர் உயிரிழந்தனர் என்றும் 25 வரையிலான வேங்கைகள் களப் பலியாகினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

திணறிக் கொண்டிருக்கும் இராணுவத்தினருக்கு உதவும் முகமாக நேற்றும் ஸ்ரீலங்கா விமானப்படை வான் தாக்குதல்களை தொடர்ந்தன.

எனினும் விடுதலைப் புலிகள் போராளிகள் பெரும் தீரத்துடன் — சளைக்காமல் — முகாம்களை முற்று முழுதாகத் தகர்க்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

முகாமின் கம்பி வேலிகளையும் ஊடறுத்துக் கொண்டு போராளிகள் முன்னேறிக் கொண்டிருப்பதாக நேற்று பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இது இவ்வாறிருக்க, இந்தப் பெரும் போர் குறித்து இருதரப்பிலும் நேற்று வரை

[6 ஆம் பக்கம் பார்க்க]

## சௌதாலா முதல்வரானார்

ஹரியான மாநில முதலமைச்சராக திரு. ஓம்பிரகாஷ் சௌதாலா மீண்டும் பதவி ஏற்றிருக்கிறார்.

முதலமைச்சர் பதவியை திரு. ஹுக்கும் சிங் ராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து ஹரியானா மாநில சட்டசபை ஜனதாதள் [எஸ்] எம். எல். ஏக்கள் கூடி துணைப் பிரதமர் தேவிலாலின் புதல்வரான திரு. ஓம்பிரகாஷ் சௌதாலாவை தலைவராகத் தெரிவு செய்தனர்.

முன்னாள் முதலமைச்சர்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## வல்வை, மந்திகை நோக்கி திடீரென ஷெல் தாக்குதல்

நேற்று மாலை 5 மணியளவில் பலாலி இராணுவ முகாமில் இருந்து வல்வெட்டித்துறை, மந்திகை பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

மந்திகை ஆஸ்பத்திரிப்பகுதியிலும் ஷெல் ஒன்று விழுந்து வெடித்ததாகத் தெரியவந்தது. வல்வெட்டித்துறையில் விழுந்த ஷெல்லுக்கு ஒருவர் காயமடைந்து, கால் ஒன்று துண்டிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது எனினும் இதனை ஊர்ஜிதம் செய்து கொள்ள முடியவில்லை. [ஓ-15]

## கட்டுவன் இராணுவமுகாம் கண்டபடி ஷெல் வீச்சு

### தெல்லிப்பளையில் ஒருவர் காயம்

கட்டுவன் முகாம் இராணுவத்தினர் நேற்று மாலை 3-45 மணியளவில் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி திடீரென கண்டபடி ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

தெல்லிப்பளையில் விழுந்த ஷெல்லுக்கு முதியவர் ஒருவர் காயமடைந்தார். காயமடைந்த கதிரன் கந்தையா [65 வயது] யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்

வீடுகள் சிலவும் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது

அவ்ரோ விமானம் ஒன்று சுற்றி வட்டமிட்டுச் சென்ற ஒருசில நிமிடங்களில் ஷெல் தாக்குதல் ஆரம்பமானதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஓ-15]

## கல்வி அதிகாரிகள் கூட்டத்தில் கூட்டுப்படை அதிகாரிகள்

கொழும்பு, மார்ச் 23

கொழும்பில் இன்று நடைபெற இருக்கும் வடக்கு-கிழக்குப் பிரதேசக் கல்விப் பணிப்பாளர்கள் கூட்டத்தில் கூட்டுப் படைத் தலைமையக அதிகாரிகளும் கலந்து கொள்கின்றனர்.

பரீட்சை ஆணையாளர் இக்கூட்டத்திற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளார். வடக்கு-கிழக்கில் விசேட பரீட்சைகளை நடத்துவது சம்பந்தமாக மாவட்டக் கல்விப் பணிப்பாளர்களுடன் நடத்தப்படும் இரண்டாவது கூட்டம் இதுவாகும்.

ஆண்டு 5 புலமைப் பரிசில், ஜி. சி. ஈ. [உயர்தரம்] ஆகிய

[6 ஆம் பக்கம் பார்க்க]

### ஸ்ரீலங்கா படையின் தாக்குதலைக் கண்டித்து

## இந்திய மீனவர்கள் இராமேஸ்வரத்தில் பேரணி

சென்னை, மார்ச் 23

இந்திய மீனவரை இலங்கைக் கடற்படையினர் தாக்குவதைக் கண்டித்தும்— 1974 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்ததைப் போலவே கச்சதீவில் இந்தியர்களுக்கு மீன் பிடிக்கும் உரிமையை மீண்டும் வழங்கக் கோரியும் இராமேஸ்வரத்தில் மீனவர்கள் கடந்த வியாழக்கிழமை ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

இலங்கைக் கடற்படையினரின் துன்புறுத்தல்களில் இருந்து இந்திய மீனவர்களைக் காப்பாற்ற புதுடில்லி அரசு தலையிடவேண்டும் என்று ஊர்வலத்தில் கோஷம் எழுப்பப்பட்டது. [இ-எ]

## வரதராஜப்பெருமாள் தப்பிச் செல்ல முயன்றாராம்

புதுடில்லி, மார்ச் 23

மத்தியப் பிரதேசம், சண்டேரி நகரில் தனிமை பங்களா ஒன்றில் தங்க வைக்கப்பட்டிருக்கும் வடக்கு-கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் அ. வரதராஜப்பெருமாளுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ் காந்தியை சந்திப்பதற்காக பங்களாவிலிருந்து காவலை மீறி தப்பிச்செல்ல வரதராஜப் பெருமாள் மேற்கொண்ட முயற்சி அம்பலமானதைத் தொடர்ந்தே பாதுகாப்புத் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாக புதுடில்லியில் புலனாய்வு வட்டாரங்கள் தெரிவித்தன.

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா கொழும்பில்

[6 ஆம் பக்கம் பார்க்க]

# மேலும் எண்மரின் புகழுடல்கள் நேற்று யாழ். வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், மார்ச் 23

சிலாவத்துறை மோதலில் களப்பலியான மேலும் எட்டு வேங்கைகளின் புகழுடம்புகள் நேற்று யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டன.

கடந்த செவ்வாய் இரவு இடம்பெற்ற மோதலில் வீர மரணத்தைத் தழுவிக் கொண்ட பதினேழு விடுதலைப் புலிகளின் புகழுடம்புகள் நேற்று முன் தினம் கொண்டுவரப்பட்டன என்பது தெரிந்ததே.

சூரியகுமார் [கனகராசா லிங்கேஸ்வரன் - புத்தூர்], கோணேஸ் [சின்னத்தம்பி குமார் - நவக்கிரி, புத்தூர்], சந்தா [நடராசா திலிப் குமார் — வரணி வடக்கு]

சைமன் [நாகராசா மோசன ரூபன் — கொக்குவில்], றொபேர்ட் [குலநாதன் குலமோகன் - அளவெட்டி], பாப்பா [இராசலிங்கம் பத்மலிங்கம்—மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்], பீற்றர் [சத்தியநாதன் ஸ்ரீஸ்கந்தராசா — மானிப்பாய்], தயா [பவானிதவராயசம் — புன்னாலைக் கட்டுவன்] ஆகிய எண்மரின் புகழுடல்களே யாழ். எடுத்து வரப்பட்டன.

மேஜர் ரஞ்சன், கப்டன் மொறிஸ், லெப்டினன்ட் புலவர், லெப்டினன்ட் குட்டி, 2 ஆவது லெப்டினன்ட் நாதன் ஆகியோர் உட்பட 17 வேங்கைகளின் புகழுடம்புகள் நேற்று முன் தினம் கொண்டுவரப்பட்டன என்பது தெரிந்ததே.

# குடாநாடு எங்கும் சோகம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

மன்னாரில் மூன்று இராணுவ முகாம்களைத் தாக்குவதில் ஈடுபட்டு வீர மரணம் அடைந்த தமிழீழ விடுதலைப் புலிகள் போராளிகளுக்கு நேற்று வடக்கின் எல்லா மாவட்டங்களிலும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

குறிப்பாக குடாநாடெங்கும் வீதிகள், மற்றும் மக்கள் கூடும் இடங்கள் கடைகள், வீடுகள் எங்கும் கறுப்புக் கொடிகள் கட்டித் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது. புலிக் கொடிகள் அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டிருந்தன. சோக மற்றும் புரட்சிக் கீதங்களும் இசைக்கப்பட்டன.

நேற்று வர்த்தக நிலையங்கள் மற்றும் தேநீர்க் கடைகள் உட்பட ஏனைய தொழில் நிலையங்களை அரை நேரத்துடன் மூடி மக்கள் துக்கம் அனுஷ்டித்தனர். எங்கும் சோக மயமாக இருந்தது.

மன்னார் களத்தில் வீர மரணம் அடைந்த ஆறு வீர

[6ஆம் பக்கம் பார்க்க]

## முச்சந்தி முரளி



லேசிலை சிக்காது......!!

## அரசியல் கட்சிகள் பலவும் ஜெயலலிதாவுக்கு 'தூண்டில்'!

புதுடில்லி, மார்ச் 23

இந்திய அரசியல் கட்சிகள் பலவும் செல்வி ஜெயலலிதாவைத் 'தூண்டில்' போட்டு இழுக்க பகீரதப்பிரயத்தனம் செய்து வருகின்றன.

எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் தமிழகத்தில் அ. தி. மு. க. [ஜெயலலிதா] வுடன் கூட்டுவைத்துக் கொள்ள அனேக கட்சிகள் முனைந்து செயற்பட்டு வருகின்றன.

இது இவ்வாறிருக்க, தமிழகத்தில் தொகுதி உடன்பாடு காணுவது குறித்து அ. தி. மு. க. பொதுச் செயலாளர் ஜெயலலிதாவுடன் பேச்சுக்கள் நடத்தப் போவதாக பாரதீய ஜனதாக் கட்சி நேற்று அறிவித்தது.

பிரதமர் சந்திரசேகர் தலைமையிலான ஜனதா தள்

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ சுகுனாஸ் ★

## புடைவை மாளிகை

நேற்று வெள்ளிக்கிழமை மங்களகரமாகத் திறந்து வைக்கப்பட்டது.

[நேற்றைய உதயனில் வெளியான விளம்பரத்தில், திறப்பு விழா 23-03-91 இல் நடப்பதாகத் தவறுதலாக வெளிவந்துவிட்டது]

இறக்குமதி செய்யப்பட்ட புடைவை வகைகளையும், மங்கள வைபவங்களுக்கு ஏற்ற ஜவுளிகளையும் சுகுனாவில் பெற்றுக் கொள்ளலாம்.

20, அருச்சுனா வீதி, (ஸ்ரான்லி வீதி) யாழ்ப்பாணம்.


# நினைவஞ்சலி



## அமரர் செல்வராஜ்

விரைந்தகன்ற கனவாய் ஆறு மாதங்கள் உருண்டோடி விட்டன டடா! உங்கள் நீங்காத நினைவுகள் எங்கள் இதயங்களை விட்டு அகலா.

அமைதியில் அனுதினமும் உங்களை நினைந்து ஜெபிக்கின்றோம். கடவுள் உங்களுக்கு நித்திய இளைப்பாறுதலை ஈவாராக.

பாசத்துடன் நினைவு கூரும்:
புஸ்பம், டிலிப், சாந்தி.

''புஸ்பா கொட்டேஜ்''
மேற்குப் புலோலி,
புலோலி. [16195]

# ஜே. வி. பி. முக்கியஸ்தர் கைது

கொழும்பு, மார்ச் 23

பதுளை மாவட்டத்தில் பசறை நகரில் ஜே. வி. பி. இயக்கத்தைச் சேர்ந்த பிரபல தலைவர் ஒருவர் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டார்.

தென்பகுதியில் இடம்பெற்ற பல கொலை மற்றும் கொள்ளைச் சம்பவங்களுக்கு அவர் பொறுப்பாக இருந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் தற்போது தீவிர விசாரணைக்குட்படுத்தப் பட்டுள்ளார் என்று அறிவிக்கப்படுகிறது. [ஓ-எ]

# வட்டமிட்ட அவ்ரோ!

குருநகர், மார்ச் 23

நேற்றுப் பிற்பகல் 2. 30 மணிக்குப் பின்னர்—மூன்று தடவைகள் —அவ்ரோ விமானம் ஒன்று யாழ். நகருக்கும், அதனை அண்டிய பகுதிகளுக்கும் மேலாக வட்டமிட்டும், குறுக்கும் நெடுக்குமாகவும் பறந்து, அவதானித்தபடி சென்றது.

இதேவேளை குடா நாட்டின் வேறு சில பகுதிகளில் ஹெலிகொப்டர் சுற்றிச் சுற்றி வட்டமிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஓ-51]

# தாதிகள் பயிற்சி நெறி ஏப்ரல் 1 இல்

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ். போதனா வைத்திய சாலை தாதிகள் பயிற்சிப் பாடசாலையில் பயிற்சி பெற புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான பயிற்சி நெறி எதிர்வரும் ஏப்ரல் 1ஆம் திகதி ஆரம்பமாக இருக்கிறது.

கடந்த ஆண்டு டிசம்பர் 3 ஆம் திகதி பயிற்சி வகுப்புக்கு சமுகமளிக்கும்படி கடிதம் அனுப்பப்பட்ட அனைத்து மாணவர்களும் மேற் குறிப்பிட்ட திகதிக்கு பாடசாலைக்கு சமுகமளிக்குமாறு யாழ். போதனா வைத்திய சாலைப் பணிப்பாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1 - 4 - 91 இல் ஆரம்பமாகவிருக்கும் இப் பயிற்சி நெறிக்கு கடந்த வருடத் தெரிவில் 32 பேரும், இவ் வருடம் 20 பேரும் ஆக மொத்தம் 52 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். [இ-15]

# தினமும் அலையும் மக்கள்

தென்மராட்சி, மார்ச் 23

பிறப்பு - இறப்பு பதிவதற்கும், சான்றிதழ் பெறுவதற்கும் பளைப் பகுதியில் உள்ள பிறப்பு-இறப்பு பதிவுகாரரிடம் தினமும் அலைய வேண்டி உள்ளதாம்.

எழுதுமட்டுவாளிலிருந்து முள்ளியான் வரையுள்ள பச்சிலைப்பள்ளிப் பகுதிக்கு பளையில் மட்டுமே பதிவுகாரர் உள்ளதால் தூர இடங்களிலிருந்து வருபவர்களும் ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர் என்று தெரிய வருகிறது. (இ-117]

# இந்தி மொழியில் புலமைப்பரிசில்

கொழும்பு, மார்ச் 22

இந்தி மொழியில் பாண்டித்தியம் பெறுவதற்காக இலங்கையருக்குப் புலமைப்பரிசில் வழங்கும் திட்டம் ஒன்று 1991-92 ஆம் ஆண்டில் புதுடில்லி அரசால் அமுல் நடத்தப்படவுள்ளது.

இத்தகவலை கொழும்பிலுள்ள இந்திய தூதரக அதிகாரி ஒருவர் வெளியிட்டார். [இ-எ]

# மரண அறிவித்தல்கள்

## ஞா. தூசைப்பிள்ளை

மண்டைதீவு 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஞானப்பு தூசைப்பிள்ளை 21 - 03 - 91 இல் காலமானார். இவர் அன்னரத்தினத்தின் அன்புக் கணவரும், கிறிஸ்தோபர், கிளமென்ற், பீற்றர்ஜெயராஜா, பேரின்பநாதன், அருள்நேசன், காலஞ்சென்ற அல்போன்சிஸ், வெனன்சிஸ், லோகலா அன்ரனி, லீமா றோஸ், வில்லிறாஸ், வின்சென்ற், அல்பேட்வென்செஸ்லஸ், விமலறேஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் மனோன், ஜெறா, ஜோதி, செல்வராஜா, நாஜினி மரியதாஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 22 - 03 - 91 வெள்ளிக்கிழமை மாலை 3. 00 மணிக்கு மண்டைதீவிலுள்ள புனித பேதுருவானவர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவ் வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

4 ஆம் வட்டாரம்,
மண்டைதீவு. [16191]

## மங்கையர்க்கரசி சண்முகநாதன்

வேலணை கிழக்கு 3 ஆம் வட்டாரத்தை சேர்ந்த திருமதி மங்கையர்க்கரசி சண்முகநாதன் அவர்கள் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகநாதன் [நாதன்-ஹரன் படமாளிகை உரிமையாளர்] அவர்களின் அன்பு மனைவியும் ஜெயசேகரன், கமலவாணி, ஞானசேகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சிங்கராஜா, திருநாவுக்கரசி பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரியும் இராஜீவன் [இலங்கை வர்த்தக வங்கி], பபா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்

அன்னாரின் ஈமக்கிரியைகள் 23. 3. 91 அன்று அவரின் இல்லத்தில் நடைபெற்று காலை 10 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக சாட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வேலணை கிழக்கு — ச. ஞானசேகரன்
[15927]

# சட்டமா அதிபரின் நாடகம்!

சட்டமா அதிபர் சுனில் டி சில்வா நாடகத்தில் நடிக்கிறார்.

''அவர் யாழ்ப்பாணத்தில் இருந்து வருகிறார்'' [He comes from Jaffna] என்ற நகைச்சுவை நாடகத்தில் ஒரு முக்கிய பாத்திரத்தில் அவர் நடிக்கின்றார்.

இந்த நாடகம் மருதானை எல்பின்ஸ்டன் தியேட்டரில் சென்ற வியாழக்கிழமை மேடையேற்றப்படுவதாக இருந்தது. [உ எ]

# பதவி வெற்றிடங்கள்

## வலி. கிழக்கு (தென்பகுதி) தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கம், கோப்பாய்

**வயது:-**
சகல பதவிகளுக்கும் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் விண்ணப்ப முடிவு திகதியில் 21 க்கும் 40க்கும் இடைப்பட்டவராய் இருத்தல் வேண்டும்.

**01. கணக்காளர்:-**
குறியீடு: 104 - 12 வேதனம்: 855 - 30X7 - 40X8 - 1385/—

**தகைமைகள்:-**

[அ] கூட்டுறவு பணியாளரின் 11 வது சம்பளத்திட்டத்தில் கணக்குப் பதிவாளர் அல்லது கணக்கு அல்லது கணக்காய்வு லிகிதர் பதவியிலான 02 வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு பணியாளரின் 12 வது சம்பளத் திட்டத்திலான கணக்கு சம்பந்தமான பதவியில் 04 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

[ஆ] ஐக்கிய இராஜ்ஜியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையிலான சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்குத் துறையிலான 02வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

[இ] கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் [உயர்தரம்] / க. பொ. த [உயர்தரம்] இக் கணக்கியலை உள்ளடக்கிய மூன்று பாடங்களிலான சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்கியல் தொடர்பான துறையில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**02. காசாளர்:-**
குறியீடு:- 306 - 15 வேதனம்: 730 - 20x10- 25x5 - 1055/-

**தகைமைகள்:-**

[அ] கூட்டுறவுப் பணியாளரின் 14 வது சம்பளத் திட்டத்திலான பதவியில் 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

[ஆ] கூட்டுறவுப் பணியாளர் [சாதாரணம்] பத்திரம் க. பொ. த [சாதாரணத்தில்] இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம்/வர்த்தக எண்கணிதம்/தூயகணிதம், தமிழ் பாஷை என்பவற்றை உள்ளடக்கியதாக 06 பாடங்களிலான சித்தியும், காசாளராக/வியாபார நடவடிக்கைகளில் 01 வருடத்திற்குக் குறையாத அனுபவம்;

**03. தட்டெழுத்தாளர்/லிகிதர்:-**
குறியீடு 305 - 15 வேதனம் 730 - 20 X 10 - 25 X 5 - 1055/-

**தகைமைகள்:-**
க. பொ. த [சாதாரணத்தில்] தமிழ்மொழி உட்பட 06 பாடங்களில் சித்தியும் அல்லது தேசிய பொதுக் கல்வித் தராதரப் பத்திரப் பரீட்சையில் மேற்காண் பாடங்களை உள்ளடக்கியதான சித்தியும், தட்டெழுத்தாற்றல் நிமிடத்திற்கு 20 சொற்களும்.

**04. லிகிதர்:-**
குறியீடு 302 - 16 வேதனம் 700 - 15 X 10 - 20 X 5 - 950/-

**தகைமைகள்:-**
க. பொ. த சாதாரணத்தில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம்/வர்த்தக எண்கணிதம்/தூயகணிதம், தமிழ்பாஷை என்பவற்றினை உள்ளடக்கியதாக 06 பாடங்களில் சித்தி அல்லது தேசிய பொதுக் கல்வித் தராதரப் பத்திரப் பரீட்சையில் மேற்காண் பாடங்களை உள்ளடக்கியதான சித்தி;

**குறிப்பு:-**
1] சங்க பணியாளருக்கு உரித்தான மேலதிகப் படிகளும் வழங்கப்படும்.
2] சங்க பணியாளர்களுக்கும் சங்க எல்லைப் பரப்பிற்கு உட்பட்டவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்;

விண்ணப்பங்கள் யாவும் 10-04-91 திகதிக்கு முன்பாக ''தலைவர்'' வலி கிழக்கு [தென்பகுதி] தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவு சங்கம்- கோப்பாய் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்;

தலைவர்
வலி கிழக்கு [தென்பகுதி] தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கம், கோப்பாய்.

[சி/5879]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**A/L**

**PURE + APPLIED**

திரு. முருகையா
சனி — ஞாயிறு

2 00 Pure - Co - ordinate + Calculus
3-00 Applied — காவிகள்
4 00 Applied — மொத்தல்
5-00 Pure — தளகேத்திர கணிதம் (Plane Geometry)

ஆரம்பம்: 23 — 03 — 1991

**BOND INSTITUTES**

58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[16178]


# பிறப்புச் சான்றிதழ் விண்ணப்பம் கையேற்பது இடைநிறுத்தம்

## அத்தாட்சிப் பத்திரப் படிவங்கள் முடிவடைந்தன

நவாலி, மார்ச் 23

யாழ். பிறப்பு - இறப்பு பதிவாளர் அலுவலகத்தில் பிறப்பு அத்தாட்சிப் பத்திர விண்ணப்பங்களை கையேற்பது கடந்த வியாழன் 21 ஆம் திகதி முதல் இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்த அலுவலகத்துக்கு இந்த வருடம் ஜனவரி மாதம் இரண்டாயிரம் பிறப்பு அத்தாட்சிப் பத்திரப் படிவங்கள் கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

அவசர தேவைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு மாத்திரம் ஒரு பிரதி வீதம் இவை வழங்கப்பட்டு வந்தன.

தற்பொழுது இவை முடிவடைந்து விட்டதனால் விண்ணப்பங்கள் கையேற்பது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

ஆனால் கல்யாண அத்தாட்சிப்பத்திரம், இறப்பு அத்தாட்சிப் பத்திரம் பெறுபவர்களின் விண்ணப்பங்கள் கையேற்கப்படுகின்றன.

[இ-100]

## காரைநகர், ஊர்காவற்றுறை அகதிகளுக்கு போரூட் உதவி

காரைநகர், ஊர்காவற்றுறைப் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த 350 குடும்பங்களுக்கு 'போரூட்' அமைப்பு தற்காலிக வீடுகளை அமைத்துக் கொடுத்துள்ளது

காரைநகரில் இருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கு வலந்தலைச் சந்தியிலும், ஊர்காவற்றுறை ஊநண்டி கிராமத்தில் இருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கு சுருவிலிலும் இந்த வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு வீடும் 8 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த அகதிகளில் கல்வி, சுகாதார வசதிகளையும் போரூட் அமைப்பு கவனித்து வருகிறது. [இ-3]

## திடீர் பரிசோதகர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை

உரும்பராய், மார்ச் 23

உரும்பராய் ஊரெழுப் பகுதிகளிலுள்ள சிற்றூரவைகள், வர்த்தக நிலையங்களைக் கண்காணிப்பதற்கு திடீர் பரிசோதகர்களை நியமிக்கவுள்ளனர்.

ஒவ்வொரு சிற்றூரவைப் பகுதியிலும் பொது மக்களிலிருந்து இருவர் இதற்கெனத் தெரிவு செய்யப்படவுள்ளனர். [இ-154]

## வெள்ளைத்தாளுடன் நோயாளர்

புளியங்கூடல், மார்ச் 23

தற்போது வேலணை மத்திய கல்லூரி மாணவர் விடுதியில் இயங்கும் ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலைக்கு செல்லும் நோயாளர்கள் வெள்ளைத்தாள் கொண்டு வருப்படி நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்

நோயாளர் பதிவுக்கும், மருந்து எழுதவும் தற்போது வைத்தியசாலையில் வெள்ளைத்தாளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. [இ-125]

## சப்பாத்துக்குள் தங்கக்கட்டி

கொழும்பு, மார்ச் 23

சிங்கப்பூரில் இருந்து தங்கம் கடத்திக் கொண்டு வந்த இலங்கையர் ஒருவரை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து சுங்கத்திணைக்கள அதிகாரிகள் கைது செய்தனர்.

சந்தேகநபர் அணிந்து வந்த சப்பாத்தின் அடியில் ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கத் துண்டுகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன.

சந்தேக நபருக்கு 3 லட்சத்து 80 ஆயிரம் ரூபா அபராதமாக சுங்கத்திணைக்களத்தில் விதிக்கப்பட்டது. [இ-எ]

## பாரதிதாசன் நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 23

பாரதிதாசன் நூற்றாண்டு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழகத் தமிழ் மன்றம் இதனை ஏற்பாடு செய்துள்ளது. [இ]

## துர்க்காபுரத்தில் தர்மப் பணம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

துர்க்காபுரத்தில் அமைந்துள்ள காங்கேசன்துறை அஞ்சல் அலுவலகத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை நவம்பர் மாதத்துக்கான பொதுசன மாதாந்த உதவிப் பணம் வழங்கப்படும்.

கீரிமலை, ஊறணிக்கரை, மயிலிட்டி, பலாலி உப அஞ்சல் அலுவலகத்தில் பணம் பெற்றவர்களும் இங்கு பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [இ]

## லெப். சுதன் சனசமூக நிலையம்

லெப். சுதன் நினைவு சனசமூக நிலையம் கடந்த வியாழக்கிழமை மிருசுவில் வடக்கில் இவரின் பெற்றோரினால் திறந்து வைக்கப்பட்டது

வைபவத்தில் கொடிகாமம் பிரதேசப் பொறுப்பாளர் இராகுலன், மிருசுவில் பிரிவுப் பொறுப்பாளர் புரட்சி உட்பட பலர் கலந்து கொண்டனர். [இ-117]

## வைத்தீஸ்வராவில் நினைவஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

வைத்தீஸ்வராவின் உயர்தர வகுப்பு மாணவர்களாக இருந்து களப்பலியான, வீரவேங்கை சாம்சன் [செல்வநாயகம் செல்வந்திரன்], இளம் புலி சாம்சன் [செல்லப்பா-தவேந்திரன்] ஆகியோருக்கும் பாடசாலையில் கல்வி கற்று வீரமரணம் எய்திய ஏனைய போராளிகளுக்கும் நினைவஞ்சலிக் கூட்டம் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1-00 மணிக்கு நடைபெறும். [இ]

## குவைத்தில் வெளிநாட்டார் வேலை வாய்ப்புக் குறையும்

குவைத்தின் சனத்தொகையை பத்து லட்சமாகக் குறைக்க மன்னர் அல்சபா முடிவு செய்துள்ளார்.

இதன் மூலம் குவைத்தில், குவைத் பிரசைகள் பெரும்பான்மையினராக வாழும் நிலையை உருவாக்க மன்னர் தீர்மானித்துள்ளார் என்று அறிவிக்கப்படுகிறது.

ஈராக்கின் ஆக்கிரமிப்புக்கு முன்னர் குவைத்தின் சனத்தொகை 20 லட்சமாக இருந்தது. அப்போது குவைத்தில் வாழும் குவைத் பிரசைகள் சிறுபான்மையினராக இருந்தனர். வெளிநாட்டுப் பிரசைகளே பெரும்பான்மையினராக இருந்தனர்.

இந்த நிலையை மாற்ற குவைத்தில் வெளிநாட்டாருக்கு வேலைவாய்ப்பு வழங்குவது கணிசமான அளவு குறைக்கப்பட இருப்பதாகக் குவைத் அரசு தெரிவித்துள்ளது. [இ எ]

## சக்கரம் சின்னத்துக்கு ஜனதா தள் (எஸ்) உரிமை

புதுடில்லி, மார்ச் 23

உண்மையான ஜனதாதள் கட்சி தம்முடையதே என்று பிரதமர் சந்திரசேகர் தலைமையிலான ஜனதா தள் [எஸ்] கட்சி செய்துகொண்ட முறைப்பாடு பற்றிய விசாரணை அடுத்த மாதம் 3 ஆம் திகதி நடைபெறும் என தேர்தல் ஆணைக்குழு அறிவித்து உள்ளது.

ஜனதா தள் கட்சியின் தேர்தல் சின்னமான சக்கரம் தமது கட்சிக்கே வழங்கப்பட வேண்டும் என்றும் ஜனாத தள் [எஸ்] கட்சித்தேர்தல்ஆணைக் குழுவைக் கோரியுள்ளது. [இ-எ]


## போக்குவரத்து காவலர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

1. முழுப் பெயர்:
2. விலாசம்:
3. வயதெல்லை: 18 தொடக்கம் 35 வரை 01-04-1991 அன்று 18 வயது நிரம்பியிருத்தல் வேண்டும்.
4. உயரம்: 5 அடி 6 அங்குலம்.
5. மார்பகலம்: 32 அங்குலம் மூச்சு வெளியேறிய நிலையில்.
6. கல்வி: க. பொ. த [சா/த] தமிழ் மொழி அல்லது தமிழ் இலக்கியம் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
7. சாரணியம், முதலுதவிப்படை, விளையாட்டு போன்றவற்றில் பங்குபற்றியிருப்பின் விசேஷ தகுதியாகக் கருதப்படும்.
8. யாழ். மாவட்டத்தில் எப்பாகத்திலும் கடமையாற்றுதல் வேண்டும்.
9. உதவிப் பணம் வழங்கப்படும்.
10. விண்ணப்பங்களை 27-03-91க்கு முதல் அல்லது அன்று கிடைக்கக் கூடியதாக பின்வரும் முகவரியில் நேரில் கையளிக்கவும்.

[விண்ணப்பங்கள் யாவும் சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்]

போக்குவரத்துப் பிரிவு,
சுன்னாகம்.

[16190]



மில்க்வைற் திரவ சவர்க்காரம்
சகல தேவை அழுக்கு நீக்கி

MILK WHITE LIQUID SOAP
All Purpose Dirt Remover

### சாதாரண வீட்டுச் சலவைக்குப் பாவிக்கும் முறை

1. ஒரு லீற்றர் நீரில் பத்து மேசைக்கரண்டி மில்க்வைற் திரவ சவர்க்காரத்தை ஊற்றவும்.
2. நுரை செறிந்திட நீரைக் கலக்கவும்.
3. கலவையுள் ஈரத் துணியை அமிழ்த்திக் கலவையை துணியில் செறியச் செய்யவும்.
4. பத்து நிமிடங்களில் துணியைச் சுத்த நீரில் நன்றாக அலசி எடுக்கவும்
5. சலவை செய்யும் துணிகளில் எண்ணிக்கைக்கும், பொலிவிற்கும் ஏற்ப அளவில் மாற்றம் செய்யவும்.

சகல ப. நோ. கூ. சங்கங்களிலும், கடைகளிலும் மில்க்வைற் முகவர்களிடமும் விற்பனையாகின்றது.

[சி/5873] — மில்க்வைற் - யாழ்ப்பாணம் —



போட்டோஸ்ரற் பிரதிகள்

• சாதாரணம்
• சிறிதாக்கல்
• பெரிதாக்கல்




தரமான தாள்களில் தெளிவான பிரதிகளைப் பெற விஜயம் செய்யுங்கள்

ஸ்கைலைன்ஸ் 281-B, மணிக்கூட்டுக் கோபுரவீதி, யாழ்ப்பாணம்



## மாதாந்த பயிற்சிப் பரீட்சையும் இலவச கருத்தரங்கும்

வழமைபோல் எமது நிறுவனத்தினால் போயா தினங்களில் நடத்தப்படும் O/L இற்கான பயிற்சிப் பரீட்சையும், கருத்தரங்கும் 29 - 03 - 91 வெள்ளி காலை 8-00 மணி முதல் நடைபெறும்.

★ 25 - 03 - 91 இல் எம்மால் நடத்தப்படவிருந்த அனைத்துப் பாடங்களுக்குமான முன்மாதிரிப் பயிற்சிப் பரீட்சைக்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

Examination Unit

BOND INSTITUTES

58 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். [16192]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நிதான விலையில் உப்பு விற்பனைக்கு உண்டு. கருவாட்டுக்குத் தேவையான அரைத்த உப்பும், கட்டி உப்பும் எம்மிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். கட்டி உப்பு மொத்தவிலை 6 50, கட்டி உப்பு சில்லறை விலை 7 00 கிடைக்குமிடம் ஸ்ரீ சாயிமில் 76/222}, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [16180]

அக்ஷேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. V. K. திருநாவுக்கரசு V.K.T Building கொக்குவில் மேற்கு, கொக்குவில் [15924]

### வாடகைக்கு தேவை

இடம் பெயர்ந்த குடும்பத்துக்கு சங்கானை சந்தையிலிருந்து 1/4 மைல் சுற்றாடலில் சகல வசதிகளுடனும் வீடு தேவை. தொடர்பு:- விமலசிங்கம், மே/பா என்.டி. ராசரத்தினம் மாக்கெற் சங்கானை. [16187]

### செவ்வாய் மாற்றம்

இன்று செவ்வாய் மாற்றம் சனி ராகுவுக்குக் கெட்ட பார்வையினாலும், வக்கிர குரு, கேது சண்டாள யோகத்தினாலும், சிவில்யுத்தம், பொருளாதார, இன அழிவுகள் தொடரும். ஜோதிட ஆலோசனைகளுக்கு PROF: சத்தியதாஸன், ஞானம் ஸ்ரோர்ஸ், சித்தன் கேணி. [16185]

### SLEAS

Sleas - பரீட்சைக்குரிய நுண்ணறிவு, பொது உளச்சார்பு, கிரகித்தல் நூல்கள் எல்லாப் பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஆக்கியோன்: க. குணராசா, எம். ஏ. [16184]

### தேவை

பாவித்த சம்போ, ஓடிக்கலோன், Gum [கம்] Vicks போத்தல், பவுடர் டப்பா, போல்ப்பொயின்ட் பேனா சனிக்கிழமைகளில் மட்டும் காலை 9 மணி முதல் 12 மணி வரை வாங்கப்படும். S. சத்தியன் 55, மணிக்கூண்டு வீதி, கொழும்பு ஸ்ருடியோ பின்புறம், யாழ்ப்பாணம். [இ-5867]

### மணமகள் தேவை

ஆங்கில ஆசிரியருக்கு சைவ போசனமுள்ள மணமகள் தேவை. எல்லாம் சமாராக எதிர்பார்க்கப்படும். முழு விவரத்துடன் கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல-193, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [16148]

நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பெற்றோர் நற்பழக்கங்களும், உயரமானவரும், அழகான வருமான U.K யில் கணக்காளராக இருக்கும் 29 வயதும் 8ல் செவ்வாயும் உடைய மகனுக்கு U.K, அவுஸ்திரேலியா, கனடாவில் வசிக்கும் அல்லது கொழும்பில் வீடுடைய அழகிய படித்த மணப்பெண்ணை எதிர்பார்க்கின்றார்கள். விபரங்களுடன் தொடர்பு இல-196, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [16175]

யாழ் இந்து வயது—29, B. Sc. சிவில் எஞ்சினியர் 1 st. Class Batch- Top பேராதனை Scholar M.Sc P. H. D கேம்பிறிட்ஸ் சுவாதி நட்சத்திரம் செவ்வாய்க்குற்றமற்ற மணமகனுக்கு [டாக்டர் அல்லது B. Sc. விரிவுரையாளர்] மணமகள் தேவை. ABCDE 328, நாவலர் றோட், ஆனைப்பந்தி. [16158]

### சோதிடமாந்திரீகம்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள். ''சக்தி சரவணா'' 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [யாழ்ப்பாண இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக] தினசரி பகல் 9 மணி தொடக்கம் 3 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. [16179]

### மில்க்வைற்

திரவ சவர்க்காரம் அடைத்து வரும் அரை வெற்றுப் போத்தல் திருப்பித் தந்து ரூ. 1/- பெறவும். மில்க்வைற் யாழ்ப்பாணம். [இ-5875]

### தவறிவிட்டது

16 - 3 - 91 அன்று புளியங்குளத்திற்கும், ஓமந்தைக்கும் இடையில் எனது பிரயாணப்பை தவறிவிட்டது. அதில் தேசிய அடையாள அட்டை, பாஸ்போர்ட், வங்கிப் புத்தகம் [இல. 4653 காசோலை என்டனவும் அடங்கியுள்ளன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். ச. கனகலட்சுமி இல. 337/7 தருமபுரம். [16161]

### மணமகன் தேவை

யாழ்ப்பாணம் நல்ல குடும்பத்தைச் சேர்ந்த றோமன் கத்தோலிக்க பட்டதாரியான, சட்டத்துறையைச் சார்ந்த மணமகளுக்கு பெற்றோர் படித்த, பண்புள்ள, தகுதியான மணமகனைத் தேடுகின்றனர். விவரங்கள் சகலவற்றுடனும் விண்ணப்பிக்கவும். இல. 197, மே/பா உதயன் யாழ்ப்பாணம். [16176]

---

வடமாகாண

## தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

இல. 499, காங்கேசன் வீதி, யாழ்ப்பாணம்.

5 தொன்னுக்கு குறையாத நிறையுடைய

## திறந்த லொறி வாடகைக்கு கோரல்

எமது சமாசத்தின் பாவனைக்கு குறுகிய கால வாடகைக்கு மேற்படி விவரம் கொண்ட லொறி ஒன்றை வாடகைக்கு தர விரும்புவோர் எம்மோடு தொடர்பு கொள்ளவும்.

தலைவர்,
வடமாகாண தெ. ப. பொ. கூ.
சங்கங்களின் சமாசம்.

[சி/5877]

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அன்னையின் மடியில்:
13-10-1931

ஆண்டவன் சந்நிதியில்:
23-02-1991

### அமரர் இராசரத்தினம் ஸ்ரீபதி

[கொழும்பு, வெள்ளவத்தை ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன், யாழ். சிவதொண்டன் நிலைய அங்கத்தவர்]

நீங்கள் எம்மை விட்டுச்சென்று 31 நாட்கள் சென்றுவிட்டாலும் உங்கள் நினைவு எம் நெஞ்சை விட்டு அகலவில்லை. உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி இராசரத்தினம் அவர்களது அருமை மகனும், சிவரட்னம், காலஞ்சென்ற நவரட்னம், சுகரட்னம், அரசரட்னம் [கனடா], கமலா, லீலா, ஜீவா [கனடா] ஆகியோரது அருமைச் சகோதரரும், திலகவதி, ஜெயமணி, மாயா காந்தி, ஸ்ரீதேவி [கனடா] பத்மநாதன் சபா நாயகம், தெய்வேந்திரன் [கனடா] ஆகியோரது அருமை மைத்துனரும், சஜீத்தா சன்ஜித், நிஜா, நிருபா, நிரஞ்சன், தாரணி, ஜனகன், ஜனந்தன் ஆகியோரது மாமனாரும், நிலானி, நிருபினி, சொர்ணகாந்தி, சிவரட்னம், சிவலிங்கம், சிவகுமார், நாரணி கண்ணன், காயத்திரி ஆகியோரது சித்தப்பாவும் ஆவார்.

23-02-1991 சனிக்கிழமை நடைபெற்ற அன்னாரது இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், மற்றும் பல வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எங்கள் அன்பான நன்றியைத்தெரிவிப்பதோடு 24-03-1991 ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள வீட்டுக்கிருத்திய நிகழ்ச்சிகளில் பங்குபற்றிமதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்,
குடும்பத்தினர்.

நந்தாவில்,
கொக்குவில்.

---

# A/L PHYSICS

ஒலியியல் (SOUND)

திரு. கணேசன் (B. Eng.)

சனி — ஞாயிறு 8. 00 மணி

ஆரம்பம்: 23 - 03 - 1991


## BOND INSTITUTES

58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[16177]

---

## 2 ஆம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



### அமரர் சார்த்திகேசு பிரேம்குமார்

[யாழ் மாநகரசபை மின்சாரக்கிளை எழுதுவினைஞர்]

தோற்றம்: 15 11 1953 மறைவு: 15-03 1989

திதி: 23 - 03 - 1991

ஆறாது ஆறாது உம் பிரிவு
மாறாது மாறாது உம் நினைவு
தேறாது தேறாது எம் உள்ளம்
நூறாது நூறாது உம் அன்பு

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்,
அருமை மகன் பிறேம்ஜி,
அன்பு மனைவி, குடும்பத்தினர்.

நல்லூர். [16181]

---

## ஓராண்டு நினைவஞ்சலி



### அமரர் இராசமணி சிவசம்பு

[சிவஞானம்]

தோற்றம்: 28 - 2 - 1929 மறைவு: 2 - 4 - 1990

திதி [அட்டமி] 23 - 3 - 1991

அன்பு பண்பு பொறுமை ஆகிய நற்குணங்களால் எங்களை ஆட்கொண்டு அன்பின் பாதையில் அனைவரையும் வழிநடத்திய எங்கள் பாசம் மிகுந்த அம்மா! மின்னலென நீ மறைந்தாய் அம்மா! உங்கள் நினைவுகள் எங்களை விட்டு அகலவில்லையே அம்மா!

அறிவொளியூட்டி வளமுடன் வாழ வழி வகுத்து எம் நெஞ்சங்களில் அழியாத ஓவியமாக அமைந்தனை எங்கள் அம்மா! அன்று பங்குனித் திங்கள் நீங்கள் பூக்கொண்டு இறைவனடி செல்ல வெளிக்கிட்டீர்கள் அம்மா! இன்று நாம் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனடி பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் நினைவால் வாடும்:
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

50, அத்தியடி புதுவீதி,
யாழ்ப்பாணம். [16166]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### அடிப்படை அதுவே!

தமிழர்களுக்கு உரிமைகளை வழங்கக் கூடாது வேண்டுமானால், நாய்க்கு எலும்புத் துண்டு போடுவது போலச் சில சலுகைகளைக் கொடுத்து, அவர்களின் உரிமைகளை வழங்கிவிட்டதாக உலகுக்குக் காட்ட வேண்டும் இதுவே கொழும்பில் இருந்து ஆட்சி நடத்தும் பெரும்பான்மை சமூக அரசாங்கங்களின் நிலைப்பாடாக இருந்து வருகிறது.

தமிழர்களுக்கு அவர்களின் பிறப்புரிமைகள், வாழ்வு உரிமைகளை வழங்க வேண்டும் என்று இப்போதைய அரசுக்கேனும் சிறு மனமாற்றம் ஏற்பட்டிருப்பின் இன்றைய போர் மூண்டிருக்காது இரத்தக் களரி உண்டாகியிருக்காது. ஆனால் கொழும்பு அரசுகளுக்குத் தமிழர் விவகாரத்தில் மனமாற்றம் வருவதற்குப் பதிலாக துரோக எண்ணமே வளர்ந்து வருகிறது.

உரிமைகளை வழங்காமல் நசுக்குவதில் தொடங்கித் தமிழர்களை அழித்தொழிப்பது வரை தீவிரம் காட்டப்படுவது அந்தத் துரோகத்தின் பிரதிபலிப்பே. இராணுவத்தின் மூலம் கொடுமைகள், இன ஒழிப்பு என்பன வெளிப்படையாக நடத்தப்படுகின்றன. பொருளாதாரத் தடை, அபிவிருத்திக்குக் குந்தகம் என்பன தமிழருக்கு எதிரான மறைமுகச் சதிகள்; நெருக்குதல்கள்.

பொருளாதாரத் தடை இப்போது புலப்படக்கூடிய விதத்தில் நடைமுறைப்படுத்தப்படுகிறது: தமிழ்ப் பகுதிகளின் அபிவிருத்திக்கும், தமிழர்களின் வாழ்க்கை முன்னேற்றத்துக்கும் தடைபோடும் பல நடவடிக்கைகள் சுதந்திரத்தின் பின்னர் வெளிப்படையாகவும், இரகசியமாகவும் நடைபெற்று வந்தன; வருகின்றன.

தமிழர் பிரதேசங்களில் அபிவிருத்தித் திட்டங்களைத் தொடங்கி அவற்றின் பயனைச் சிங்களவர்கள் அனுபவிக்கக் கூடியதாக குடியேற்றத் திட்டங்கள் உருவாக்கப்படுவது நெடுநாளைய நிரந்தர நடைமுறையாகி விட்டது.

தமிழ்ப் பகுதிகளின் விவசாய, கைத்தொழில் அபிவிருத்திக்குத் தடை போடுவதும் தமிழர்களைப் பழிவாங்கும் மறைமுக நடவடிக்கைகளில் ஒன்று. இந்தத் திசையில் திட்டமிட்டுச் செய்யப்பட்ட பல சதி வேலைகள் உண்டு. மகாவலியை வடக்கே கொண்டு வராமல் அனுராதபுரத்தோடு நிறுத்தியது அவற்றில் முக்கியமானது.

சிங்களப் பிரதேசங்களில் உள்ள வளங்களைச் சிங்களவர்களே அனுபவிக்க வேண்டும். தமிழ்ப் பிரதேசங்களின் வளங்களையும் அவர்களே அனுபவிக்க வேண்டும். அது இயலாத கட்டத்தில் தமிழ்ப் பிரதேச வளங்களைத் தமிழர்கள் அனுபவிக்காமல் தடுத்துவிட வேண்டும். இதுவே கொழும்பு அரசுகளின் அடிப்படைக் கோட்பாடாக உள்ளது.

மன்னாரில் உள்ள கட்டுக்கரைக் குளத்துக்கு அருவியாற்றில் இருந்து நீர் பாய்ந்து வரும் வழியில், அனுராதபுரத்தில் கல்கடவல்ல என்ற இடத்தில் வைத்து குறுக்காக அணைக்கட்டு நிர்மாணிக்கும் சதி, மேற்கூறப்பட்ட அடிப்படைக்கோட்பாட்டின் புதிய உருவமே அன்றி வேறல்ல.

# பெப்.-மார்ச் பென்ஷன் வவுச்சர்கள் அடுத்த கப்பலில் வரும்

யாழ்ப்பாணம், மார்ச் 23

பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்கான பென்ஷன் வவுச்சர்கள் கொழும்பில் தயாராக உள்ளன. அடுத்து வரும் கப்பலில் இந்த வவுச்சர்கள் யாழ்ப்பாணம் வந்து சேரும்.

யாழ். செயலக பிரதம கணக்காளர் திரு. எஸ். சிவபாலன் இதனைத் தெரிவித்தார்.

கொழும்பு தலைமை அலுவலகத்தில் பென்ஷன் வவுச்சர்களுக்குரிய படிவங்கள் கூடத் தயாரான நிலையில் இருக்கவில்லை என்றும் மிகக் குறுகிய நாட்களில் 2 லட்சம் படிவங்கள் தயாரிக்கப்பட்டு ஓய்வூதிய வவுச்சர்கள் தயாரிக்கப்பட்டன என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் எதிர்வரும் மாதங்களுக்குரிய பென்ஷன் வவுச்சர்கள் அடுத்து வரும் கப்பல்களில் தாமதம் இன்றி வருவதற்கான ஏற்பாடுகளும் அத்தியாவசிய சேவை ஆணையாளர் அலுவலகத்துடன் செய்யப்பட்டுள்ளது.

ஜனவரி மாதத்துக்குரிய பென்ஷன் வவுச்சர்கள் ஏற்கனவே அனுப்பப்பட்டது குறிப்பிடத்தக்கது. [இ]

### தேநீர் விலை குறையவில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ். நகரப் பகுதிகளில் சீனி விலை குறைந்தும், தேநீர்க் கடைகளில் தேநீர் விலை குறையவில்லை.

சீனி கிலோ 60 ரூபா விற்கப்பட்டபோது தேநீருக்கு இருந்த விலையே தற்போதும் இருந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. [இ]

### கண் கிளினிக்

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ். போதனா வைத்தியசாலையில் கண் கிளினிக்குச் செல்வோருக்கு தற்போது வெளிநோயாளர் பகுதியில் வைத்தே நம்பர் வழங்கப்படுகிறது.

வைத்தியசாலையில் கடமையாற்றும் செஞ்சிலுவைச் சங்கத்தொண்டர்களே நம்பர் வழங்கும் பொறுப்பை ஏற்றுள்ளனர். [இ - 15]

### கருவாடு போட உப்பு இல்லை

நெடுந்தீவு, மார்ச் 22

நெடுந்தீவில் கருவாடு போடுவதற்குத் தேவையான உப்பு இன்றி மீனவர்கள் சிரமம் அடைகின்றனர். [இ-111]

## யுத்தத்தில் இழந்த தீவுகளை மீட்க 2,800 கோடி டொலர்

டோக்கியோ, மார்ச் 23

இரண்டாம் உலக மகாயுத்தத்தின்போது, சோவியத் யூனியனால் கைப்பற்றப்பட்ட நான்கு தீவுகளையும் திரும்பப் பெறுவதற்காக 2800 கோடி டொலரை மாஸ்கோ அரசுக்கு வழங்குவது என்று ஜப்பான் அரசு தீர்மானித்துள்ளது.

அடுத்த மாதம் மாஸ்கோ செல்லும் ஜப்பானிய வெளியுறவு அமைச்சர் இந்தமுடிவை உத்தியோகபூர்வமாக சோவியத் தலைவர்களிடம் தெரிவிப்பார் என்றும் அறிவிக்கப்படுகிறது. [இ-எ]

### நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 23

முத்தமிழ் வித்தகரும், முன்னாள் தமிழ் பேராசிரியருமான சுவாமி விபுலானந்தரின் நூற்றாண்டு விழா எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 3-00மணிக்கு நல்லை ஆதீனத்தில் நடைபெறும். [இ]

### சிறுநீரகம்

## வழங்கியவர் - பெற்றவர் இருவருமே மரணம்

சென்னை, மார்ச் 23

சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் சில தினங்களுக்கு முன் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை நடந்து, சிறுநீரகம் வழங்கியவர்-பெற்றுக் கொண்டவர் ஆகிய இருவருமே உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அந்த மருத்துவமனை இயக்குநரும், அறுவைசிகிச்சை செய்த சத்திரசிகிச்சை நிபுணரும் கந்த புதன் இரவு பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்;

போதிய கவனமின்றி சிகிச்சை செய்ததாக அவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

பணத்துக்காக சிறுநீரகம் வழங்குமாறு சிறுநீரகத்தை வழங்கியவரைத் தூண்டிய இன்னொரு நபரும் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

மருத்துவமனை இயக்குநரும் சத்திரசிகிச்சை நிபுணரும் நேற்று நீதிவானால் பிணையில் விடுவிக்கப்பட்டனர். சிறுநீரகத்தை வழங்கும்படி தூண்டிய மூன்றாவது நபரை பிணையில் விடக்கோரித் தாக்கல் செய்யப்பட்ட மனுவை நீதிவான் தள்ளுபடி செய்தார். [இ - எ]

## முத்தமிழ் விழாவை ஒட்டி பண்ணைப் பாலம் புனரமைப்பு

புளியங்கூடல், மார்ச் 23

தீவுப்பகுதியில் எதிர்வரும் 8 ஆம், 9ஆம் திகதிகளில் நடைபெற உள்ள முத்தமிழ் விழாவைக் காணவரும் வெளியூர் மக்களின் வசதிக்காக பண்ணைப்பாலம் சைக்கிள்கள்செல்லக் கூடிய விதத்தில் புனரமைக்கப்படும்.

இதற்கான திருத்த வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும், எதிர்வரும் 5 ஆம் திகதி அளவில் பாலம் ஊடாக சைக்கிள்கள் செல்லக்கூடியதாக இருக்கும் என்றும் தீவக கலை, கலாசார அமைப்பாளர் திரு. நிரேஷ் தெரிவித்தார்.

தீவுப் பகுதி முத்தமிழ்விழா எதிர்வரும் 8 ஆம், 9 ஆம் திகதிகளில் புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் நடைபெறும். [இ-125]

## தமிழ் தினப் போட்டிகள் மாவட்ட மட்டத்தில் மட்டுமே

தாளையடி, மார்ச் 22

வடக்கில் பாடசாலை மாணவர்களுக்கான தமிழ்த் தினப் போட்டிகள் மாவட்ட மட்டத்தில் மட்டுமே நடத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

இதுவரை காலமும் மாவட்ட மட்டத்தில் முதலிடத்தைப் பெறுபவர்கள், மாகாணரீதியிலான போட்டிகளிலும் கலந்து கொண்டு பரிசில்களைப் பெறுவது வழக்கம்.

தற்போது போக்குவரத்து சீர்குலைந்துள்ளதால் மாவட்டமட்டத்திலேயே போட்டிகள் நடத்தப்படவுள்ளன. [இ-144]

# தமிழகத் தலைவர்களை விடுத்து டில்லியுடன் உறவாட முடியுமா?

### தமிழ் போராளிகள் நிலை குறித்து சென்னைக் கூட்டத்தில் பிரஸ்தாபம்

சென்னை, மார்ச் 22

தமிழ்ப் போராளிகள் தமிழகத் தலைவர்களோடு உறவு கொள்ளாமல் புதுடில்லியில் இருப்போருடன் உறவு கொள்வார்களா? விடுதலைப் புலிகளும் அஸாம்உல்பா போராளிகளும் ஒருவருக்கொருவர் தொடர்பு வைத்துக் கொண்டுள்ளனர் என்பது சிலருக்குக் குலைநடுக்கமாக உள்ளது. ஒரு போராளி இன்னொரு போராளியோடு கூட்டுச் சேருவது இயற்கைதானே. சென்னையில் பத்மநாபா உட்பட 14 பேர் கொலை செய்யப்பட்டதற்கு விடுதலைப்புலிகளே காரணம் என்று பிரசாரம் செய்கிறார்கள். இந்த கொலைகளுக்கு ராஜீவ் காந்திக்குத் தொடர்பு இல்லை என்றுகூற முடியுமா? சென்னை பா[illegible]

இல் மக்கள் அக்கறை மன்றத்தின் சிறப்புக் கூட்டத்தில் உரையாற்றிய ஐ. ஏ. எஸ். அதிகாரி திரு. குகன் மேற்கண்டவாறு கூறினார்.

பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்துகொண்ட இக் கூட்டத்தில் திரு. குகன் மேலும் பேசியதாவது:-

ஸ்ரீலங்கா அரசாங்கம் தமிழ்ப் பகுதிகளுக்கு பொருளாதாரத் தடை விதித்து அவர்களைக் கொடுமைப் படுத்துகிறது.

விவசாயம், வியாபாரம் முதலியவற்றை முடக்கி தமிழ் மக்களின் வயிற்றில் அடிக்கிறது.

மண்ணெண்ணெய், பெற்றோல், டீசல் ஆகியவற்றை அப்பகுதிகளுக்குப் போக விடாது தடுத்து மக்களை இம்சைப்படுத்துகிறது.

இதனைத் தட்டிக்கேட்கத் துணிவில்லாதவர்கள் கடத்தல், கடத்தல் என்று கத்திக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகள் மண்ணெண்ணெய், பெற்றோல், டீசல் முதலியவைகளை விலைகொடுத்து வாங்கியே தமது ஈழத்திற்குக் கொண்டு போகிறார்கள். இதனை எப்படிக் கடத்தல் என்று சொல்லமுடியும்.

புலிகள் தமக்கு வேண்டியதை தமிழகத்தில் வாங்காமல் புதுடில்லியிலா வாங்குவார்கள்? புதுடில்லியில் வியாபாரம் நடக்கவில்லை என்ற புழுக்கத்தில் தமிழ் நாட்டில் கடத்தலுக்கு கலைஞர் இடங்கொடுத்துவிட்டார் என்கிறார்கள்.

இப்படி அவர் கூறினார். [இ]

## பெயர் பலகைகள் தமிழில்

உரும்பராய், மார்ச் 23

குடாநாட்டின் பல பகுதிகளிலும் உள்ள வர்த்தக நிலையங்களில் தமிழ் பெயர் பலகைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

முத்தமிழ் விழாவை முன்னிட்டு ஆங்கிலப் பெயர்ப் பலகைகளை தமிழுக்கு மாற்றப்பட வேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை, கலாசாரப் பிரிவு வேண்டுகோள் விடுத்திருந்தது.

அதேசமயம் சாவகச்சேரிப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களின் பெயர் பலகைகள் தமிழில் இருக்க வேண்டுமென சாவகச்சேரி வர்த்தகர் சங்கத்தினர் சகல வர்த்தக நிறுவனங்களுக்கும் அறிவித்துள்ளனர். [இ-154-117]

## போக்குவரத்து கூலி இல்லை

புளியங்கூடல், மார்ச் 22

தீவுப்பகுதி ப. நோ. கூ. சங்கங்கள் போக்குவரத்துக் கூலி பெறமுடியாத நிலையில் இருந்து வருகின்றன.

பொருள்கள் பாவனையாளர்களுக்கு ஒரு ரூபா கூட்டி விற்கப்படுவதால் போக்குவரத்துக் கூலி தரமுடியாது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறதாம். [இ-125]

### விவசாயிகளிடம் விவரம்திரட்டப்படுகிறது

கொழும்புத்துறை, மார்ச் 20

அராலி கிழக்கு, அராலி தெற்கு கிராமசேவையாளர் பிரிவில் உள்ள உற்பத்தி ஆய்வுக் குழுவினர் விவசாயிகளிடம் இருந்து காணிப் பரப்பளவு. நெற்செய்கை, சிறுதானியம் போன்றவற்றின் விவரங்களை திரட்டி வருகின்றனர். [இ-30]

### மூளைக் காய்ச்சல்; குழந்தைகள் பலி

தென்மராட்சி, மார்ச் 23

மூளைக்காய்ச்சல் நோயால் இரு குழந்தைகள் மரணமாகினர்.

பல்லவராயன் கட்டைச் சேர்ந்த இ. டிலக்ஸன் (வயது 2) இந்திராபுரத்தைச் சேர்ந்த சந்தசாமி அகிலவேணி (வயது 2) ஆகிய குழந்தைகளே மரணமானவர்களாவர். [இ-117]

### ஞாயிற்றுக்கிழமை கடைகள் மூடப்படும்

மானிப்பாய், மார்ச் 23

சுன்னாகம் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களை ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மூடும்படி சுன்னாகம் வர்த்தகர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. [இ-90]

## பொருளுடன் மறைந்தவர்

தென்மராட்சி மார்ச் 23

கிளாலியூடாக செல்வதற்காக வந்த சைக்கிள் வியாபாரி ஒருவரின் பொருளை ஏற்றி வந்து தருவதாகக் கூறி பொருளுடன் மறைந்தாராம் ஒரு வழிப்போக்கர்.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து கிளாலியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டார். [இ-117]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்து ஊழியருக்கு இரண்டு மாதச் சம்பளம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

வடபிரதேசிய போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு அக்டோபர், நவம்பர் ஆகிய இரு மாதங்களுக்குரிய சம்பளம் வழங்கப்படவுள்ளது.

கோண்டாவில் டிப்போ அதிகாரிகள் சம்பளம் வழங்குவதற்கான மத்திய போக்குவரத்துச் சபையின் அனுமதியைப் பெற்றுக் கொண்டு நேற்று யாழ் வந்து சேர்ந்துள்ளனர்.

அக்டோபர் மாதத்திற்குடணமாகவும், நவம்பருக்கு காசோலையாகவும் சம்பளம் வழங்கப்படும் என்று வ. பி. போ. சபை பொது முகமையாளர் நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

இதே வேளை—

அக்டோபர் மாதச் சம்பளம் வழங்கும் வேலை கோண்டாவில் டிப்போவில நேற்று ஆரம்பிக்கப்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

# மற்றொரு ஈராக் விமானமும் சுட்டு வீழ்த்தப்பட்டது

ரியாத், மார்ச் 23

தற்காலிக யுத்த நிறுத்தத்தை மீறியதாகக் கூறப்படும் இரண்டாவது ஈராக்கிய போர் விமானத்தையும் அமெரிக்கப் போர் விமானங்கள் நேற்று சுட்டு வீழ்த்தின.

ஈராக் பிரதேசத்தினுள்ளே கூட ஈராக்கின் போர் விமானங்கள் பறக்கக் கூடா என்பது அமெரிக்காவின் ஒரு தலைப்பட்ச தற்காலிக யுத்த நிறுத்த நிபந்தனைகளில் ஒன்றாகும்.

அந்த நிபந்தனையை மீறியதற்காக அமெரிக்கப் படைகள் ஏற்கனவே ஈராக் போர் விமானம் ஒன்றை சுட்டு வீழ்த்தின என்பது தெரிந்ததே. [ஒ-எ]

## தமிழக மண்ணில் ஈழ அகதிகள்

# மதுரை கொலைச்சம்பவம்; 5 ஈழ அகதிகள் கைது!

மதுரை உசிலம்பட்டியில் காதர் முகைதீன் என்ற உள்ளூர் வாசி ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக கோபால சமுத்திரம் அகதி முகாமில் தங்கியிருந்த ஐந்து ஈழத் தமிழ் அகதிகள் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

கொலையுண்ட நபரின் தலை திருநெல் வேலி முன்னேர்பாலம் என்ற இடத்தில் உள்ள பயன்படுத்தப்படாத மலசல கூடம் ஒன்றிலிருந்து சில தினங்களுக்கு முன்னர் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. [உ]

## வேதாரண்யம் அருகே 9 பேர் கைது

சென்னை, மார்ச் 23

தஞ்சாவூர் வேதாரணியத்திற்கு அருகில் தோப்புத்துறையில் ஒன்பது தமிழ் அகதிகள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து இரண்டு டெக்குகளும், மூன்று தங்கக்கட்டிகளும் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஒன்பது பேருக்கும் எதிராக சுங்கச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. [ச]

## உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

சென்னை, மார்ச் 23

புதுக்கோட்டை போஸ்டல் பாடசாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 150 ஈழத் தமிழர்களின் உண்ணாவிரதப் போராட்டம் மாவட்டக் கலக்டர் திருமதி ஷீலாராணி சுன்கத்தின் தலையீட்டைத் தொடர்ந்து கடந்த வாரம் கைவிடப்பட்டது.

மூன்று கோரிக்கைகளை முன்வைத்து இவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்திருந்தனர்.

★ அகதிகளுக்குரிய அந்தஸ்துடன் தாம் நடத்தப்பட வேண்டும்.

★ கட்டுப்பாடின்றி வெளியில் சென்றுவர தாங்கள் அனுமதிக்கப்பட வேண்டும்.

★ சமைத்த உணவுக்குப் பதிலாக, இலங்கைப்பாணியில் தங்களுக்கு வேண்டியதை தாங்களே தயார் பண்ணக் கூடியதாக பங்கீட்டு அடிப்படையில் உணவுப்பொருள்களை வழங்க வேண்டும்.

— இவையே அக் கோரிக்கைகளாகும்.

தடுப்புக் காவலில் இருப்போர் கட்டுப்பாடின்றி வெளியில் நடமாட அனுமதிப்பதா என்பது அரசின் கொள்கையைப் பொறுத்த விடயம் என்றும்—

ஈழத் தமிழர் எவரேனும் இலங்கை திரும்ப வேண்டும் என்று விரும்பினால் அது பற்றி ஆலோசிக்கப்படும் என்றும் கலக்டர் குறிப்பிட்டார். [உ]

## மூன்று ஈழத்தமிழ்ப் பெண்கள் பிணையில் செல்ல அனுமதி

சென்னை, மார்ச் 23

கடந்த பெப்ரவரி முதலாம் திகதி அடையாறு காந்தி நகரில் வைத்து தமிழ்த் தீவிரவாதிகள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு சென்னை மத்திய சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மூன்று ஈழத் தமிழ்ப் பெண்களையும் பிணையில் செல்ல அனுமதிக்குமாறு சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி திரு. எஸ். ஜனார்த்தனம் உத்தரவிட்டார்.

அமுதா, திருமதி கலைமதி, திருமதி கலைவாணி ஆகிய மூவரே பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இவர்கள் மூவரும் நீதிமன்றில் சமர்ப்பித்த மனுவில்—

கடந்த ஐந்து வருடகாலமாக தமிழகத்தில் அகதிகளாக தாங்கள் தங்கியிருந்து வருவதாகவும்—

தமிழக அரசு கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து வேறு சிலருடன் சேர்ந்து தாங்கள் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருமதி கலைமதி, திருமதி கலைவாணி இருவரும் கர்ப்பிணிகளாததால் தடுப்புக் காவலில் இருப்பது கஷ்டமாக உள்ளது என்றும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ]

# வ. பி. போ. ச. ஊழியர் இடமாற்றம்; பகிஷ்கரிப்பதற்குச் சங்கம் முடிவு

## தென்பகுதிக்குச் செல்வதில்லை எனத் தீர்மானம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்களைத் தென்பகுதிச் சாலைகளுக்கு இடமாற்றும் திட்டத்தை முழு அளவில் பகிஷ்கரிக்கப்போவதாக தமிழ் பேசும் போக்குவரத்து ஊழியர் சங்கம் தீர்மானித்துள்ளது.

சங்கம் நேற்று ஏற்பாடு செய்திருந்த கலந்துரையாடலின் முடிவில் இவ்வாறு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

வ. பி. போ. சபையின் கோண்டாவில், காரைநகர், ருத்தித்துபறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய சாலைகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான ஊழியர்கள் நேற்றைய கலந்துரையாடலுக்குச் சமுகம் அளித்திருந்தனர்.

கோண்டாவில், காரைநகர், பருத்தித்துறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய டிப்போக்களின் பஸ்கள் சேவையில் ஈடுபடாததால், சம்பளம் வழங்க முடியாத நிலைமை உள்ளதாகக் கூறி, ஊழியர்களை தென்பகுதிச் சாலைகளுக்கு இடமாற்றம் செய்யபபோவதாக மத்திய போக்குவரத்துச்சபை அறிவித்துள்ளது.

மத்திய போக்குவரத்துச் சபையின் இந்த முடிவை திட்டத்தை மிகக் கடுமையாக கண்டிப்பதுடன், அதற்கு எமது ஒன்றுதிரண்ட எதிர்ப்பையும் தெரிவிக்கிறோம்.

சம்பந்தப்பட்ட டிப்போக்களைச் சேர்ந்த ஊழியர்கள் எவருமே தென்பகுதிக்கு கடமைக்குச் செல்லப்போவதில்லை. ம. போ. சபையின் திட்டத்தை முழு அளவில் நாம் பகிஷ்கரிக்கவுள்ளோம்.

ஸ்ரீலங்கா அரசின் இந் நடவடிக்கை தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள அடக்குமுறைகளில் மற்றும் ஒரு புதிய தோற்றம் ஆகும். தமிழ்ப் பகுதிகளில் போக்குவரத்துச் சேவையை முற்றுமுழுதாக ஸ்தம்பிக்கச் செய்து, சகல துறை வேலைகளையும் முடங்கச் செய்வதே அரசின் நோக்கமாக இருக்கவேண்டும். இதனை சர்வதேச சமூகத்தின் கவனத்துக்குக் கொண்டு வர உள்ளோம்.

—இவ்வாறு தமிழ் பேசும் போக்குவரத்து ஊழியர் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தவர்.

ஐ. நா. அகதிகள் ஸ்தானிகராலய அதிகாரிகளிடமும் இது தொடர்பான மகஜர் ஒன்றை சங்கம் கையளிக்க இருக்கிறது என்றும் அவர்கள் கூறினர். [ஒ-5]

## பாம்பு கடித்து போராளி மரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

முல்லைத்தீவில் நேற்று முன்தினம் நியாஸ் [இராமலிங்கம் கணேஸ் - தர்மபுரம்] என்ற விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி பாம்புக் கடிக்கு இலக்காகி மரணமானார். [ஒ]

## 27 பயணிகள் படு கொலை!

சண்டிகார், மார்ச் 23

பஞ்சாப் மாநிலத்தில் இனந்தெரியாத சிலர், பஸ் ஒன்றை மறித்து, அதில் பயணம் செய்தவர்களில் 27 பேரைச் சுட்டுக் கொன்று விட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. [ஒ-எ]

## கல்வி..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

இரு பரீட்சைகள் தொடர்பான இறுதி ஒழுங்குகள் குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் —

போக்குவரத்து சீரில்லத காரணத்தினால் யாழ். பிரதேசக் கல்விப் டணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கம் இக் கூட்டத்திற்குச் செல்லவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-எ 5]

## வரதராஜப்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கொலை செய்யப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து, திரு. வரதராஜப்பெருமாளுக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டது.

அந்தச் சூழ்நிலையில்—

அவர் பங்களாவில் இருந்து டாக்ஸி ஒன்றில் வெளியேறி திரு. ராஜீவ் காந்தியைச் சந்திக்கச் செல்ல திட்டமிட்டாராம்.

மே மாதத்தில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் மத்தியில் ஆட்சியைப் பிடிக்கும் வாய்ப்பு அதிகரித்திருப்பதன் காரணமாகவே, திரு. வரதராஜப் பெருமாள் ராஜீவ் காந்தியைச் சந்திக்க முயற்சி எடுத்து வந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

## நான்காம் நாளாக...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

உத்தியோகபூர்வ அறிவிப்புகள் ஏதும் வெளியாகி இருக்கவில்லை.

படையினர் 18 பேர் வரை உயிரிழந்தனர்; இன்னும் 50 பேர் வரை காயமடைந்தனர் என்று மட்டும் பாதுகாப்புப் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை —

விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி நேற்று முன்தினம் ஹெலிக்கொப்டர் ஒன்று சேதமடைந்ததாகக் கூறப்பட்ட போதிலும், அதனை ஊர்ஜிதம் செய்து கொள்ளமுடியவில்லை. [ஒ-15

## குடாநாடு....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வேங்கைகளின் புகழுடல்கள் சங்கானைச் சந்தையடியில் மக்கள் அஞ்சலிக்காக நேற்று வைக்கப்பட்டிருந்தன.

முதியவர்கள், இளைஞர்கள், யுவதிகள், பெண்கள் உட்படப் பெரும் எண்ணிக்கையான மக்கள் திரண்டு சென்று அஞ்சலி செலுத்தினர்.

அஞ்சலி நிகழ்ச்சியைத் தொடர்ந்து புகழுடல்கள் கோப்பாய் மாவீரர் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுத் தகனம் செய்யப்பட்டன.

வடமராட்சியில், புலோலி இராமக்கோட்டடியில் நான்கு வீரவேங்கைகளின் புகழுடல்கள் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன.

பின்னர் அங்கிருந்து புகழுடல்கள் உடுப்பிட்டிச் சந்திக்கும், வல்லைச் சந்திக்கும் எடுத்துச் செல்லப்பட்டு அஞ்சலிக்கு வைக்கப்பட்டபின்னர் நவிண்டிலில் உள்ள மாவீரர் மயானத்தில் தகனம் செய்யப்பட்டன

தென்மராட்சியில், கல்வயலில் மாவீரர் உடல்கள் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்ட பின்னர் கொடிகாமம் மாவீரர் மயானத்தில் தகனம் செய்யப்பட்டன. [அ-15]

## சௌதாலா...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஹுக்கும் சிங் சௌதாலாவின் பெயரை முன்மொழிந்தார்.

மாநில ஆளுநர் முன்னிலையில் திரு. சௌதாலா நேற்று பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். [உ-எ]

## அரசியல் கட்சி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

[எஸ்] கட்சியின் சார்பில் மத்திய அமைச்சர் சுப்பிரமணியம் சுவாமியும் தொகுதி உடன்பாடு குறித்து அண்மையில் ஜெயலலிதாவுடன் பேசி இருந்தார்.

இதனிடையில்—செல்வி ஜெயலலிதாவைச் சந்தித்துப் பேசியவுடன், அ. தி. மு. க வுடன் தொகுதி உடன்பாடு குறித்து ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படும் கருத்து வேறுபாடு தீர்ந்துவிடும் என்று இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ் காந்தி ஏற்கனவே கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது. [ஒ-எ]

## மரண அறிவித்தல்

### செல்லையா இராமலிங்கம்

[சட்டத்தரணி]

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், மல்லாகத்தில் வசித்தவருமான சட்டத்தரணி செ. இராமலிங்கம் அவர்கள் 22 03-91 அன்று காலமானார். இவர் ஏழாலை மேற்கு காலஞ்சென்ற செல்லையா, அன்னப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற முத்தையா, சின்னத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற கொக்குவில் மேற்கு செல்லையா, சொர்ணம்மாவின் அன்பு மருமகனும், அருள்நாயகியின் அன்புக் கணவரும், சரோஜினி [கணக்காளர், நியூயோர்க்], மீனலோஜினி, இரஞ்சினி [சட்டத்தரணி], இராஜினி [லண்டன்] ஆகியோரின் அருமைத் தந்தையாரும், ஸ்ரீதரன் [கணக்காளர், நியூயோர்க்], திருஞானசம்பந்தன் [பொறியியலாளர்], விஸ்வநாதன் [நீதிவான், பருத்தித்துறை], குமாரவடிவேல் [பேராசிரியர், பௌதிகத்துறை, யாழ் பல்கலைக்கழகம்] ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜனனி, வருணேஷ், நயனி, சிவனி, நரேஷ், ஹரிசானந்தி, பிரணவன், குருபரன், நிருத்தன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 23-03-91 சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு 352, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை தயவுசெய்து உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக்கொள்கிறோம்.

352, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மு. திருஞானசம்பந்தன்
[16196]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 23 - 03 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org